[2009 ஜூலை 8

96—

சுற்றுச் சுவர்

***57162—திரு. பெ.சு. விஜயகுமார்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் தொகுதியில் உள்ள அரசுப் பள்ளிகளுக்குச் சுற்றுச் சுவர் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், போளூர் தொகுதியிலுள்ள, சுற்றுச் சுவர் இல்லாத பள்ளிகளுக்கு நபார்டு நிதி உதவியுடன் திட்டம் 10 மற்றும் அதன் தொடர் திட்டங்களின்கீழ் விதிகளுக்குட்பட்டு, சுற்றுச் சுவர் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ.சு. விஜயகுமார்.

திரு. பெ.சு. விஜயகுமார்: பேரன்புகொண்ட பேரவைத் தலைவர் அவர்களே, பயிர் நன்றாக இருக்க வேண்டுமென்றால், அதற்கு நாற்று நன்றாக இருக்கவேண்டும். அதேபோன்று மனித வாழ்க்கை நன்றாக இருக்க வேண்டுமென்றால், பள்ளிக் கல்வி நன்றாக அமையவேண்டும். நமது பள்ளிக் கல்வியைப் பொறுத்தவரை, தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியிலே இருக்கக்கூடிய பள்ளிக் கல்வி, இன்று சிறந்து விளங்கிக்கொண்டிருக்கின்றது. முத்தமிழ் வளர்த்த மதுரைத் தமிழ்ச் சங்கம் எங்கள் தங்கம் கையிலே இருப்பதாலேயே சிறந்து விளங்குகின்றது என்பதிலே எந்தவிதமான மாறுபட்ட கருத்தும் இல்லை. ஆனால், போளூர் தொகுதியில் இருக்கின்ற போளூர் அரசு ஆண்கள் மற்றும் பெண்கள் மேல்நிலைப் பள்ளி, மாம்பட்டு, அத்திமூர், எடப்பிறை, குருவிமலை, காங்கேயனூர், துரிஞ்சிகுப்பம், ஆத்துவாம்பாடி, கேளூர், செங்குணம், வெல்லூர், புஷ்பகிரி, பெரியகரம், கீழ்அரசம்பட்டு, கம்மவான்பேட்டை, கம்மசமுத்திரம், பெண்ணாத்தூர், சோழவரம், காட்டுப்புத்தூர், கணியம்பாடி,

2009 ஜூலை 8]

நஞ்சுகொண்டாபுரம் ஆகிய இடங்களிலுள்ள பள்ளிகளில் சுற்றுச் சுவர் சீராக இல்லாத காரணத்தால், பல்வேறு தவறுகளுக்கு அடித்தளமாக இருக்கின்றது. எனவே அவற்றுக்குச் சுற்றுச் சுவர் அமைப்பதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மூலக் கேள்விக்கான பதிலிலேயே சொல்லியிருக்கிறேன். அவருடைய தொகுதியிலுள்ள அனைத்துப் பள்ளிகளும் நபார்டு திட்டத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. 3,035 மீட்டர் அளவுக்குச் சுற்றுச் சுவர் கட்ட அந்தப் பகுதியில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள் முதல்கட்டமாக எடுத்துக்கொள்ளப்பட்டு, அதற்கான கருத்துரு அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றது. நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது.

முற்பகல் 10–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. விஜயகுமார்.

திரு. பெ.சு. விஜயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலி இல்லை என்றால் ஆடுகளும், மாடுகளும் மேய்ந்துவிடும். அதேபோலதான், இப்போது கல்விக் கூடங்களிலே காம்பவுண்ட் சுவர் இல்லை என்று சொன்னால், காலிகள் கூடாரமாக மாறிவிடும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. விஜயகுமார், அமைச்சர்தான் கட்டித் தருகிறேன் என்று சொல்லிவிட்டார் அல்லவா? (குறுக்கீடு) சொல்லுங்கள், சீக்கிரம் சொல்லுங்கள்.

திரு. பெ.சு. விஜயகுமார்: 10 நாட்களுக்கு முன்பாக ‘தினமதி’ நாளிதழிலே, போளூரிலே இருக்கக்கூடிய அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் தவறான காரியங்கள் நடக்கிறதென்று செய்தி வெளியிட்டார்கள். அதற்கு அடிப்படைக் காரணமான காம்பவுண்ட் சுவரும், காவலர்களும் சரியாக இல்லை என்று சொன்னால் கல்விக் கூடங்களெல்லாம் தவறுகள் நடக்கின்ற விடுதிகளாக மாறிவிடுகின்றன. எனவே, அந்த நிலையைப் போக்குவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள்வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கேள்விக்கு ஒரு விளக்கத்தை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நீண்ட காலமாக, பள்ளிக்கூடங்கள் ஏற்பட்டால் போதும், சுற்றுச் சுவர் தேவையில்லை என்ற கருத்துதான் நிலவியது. குறிப்பாக, கிராமங்களிலே உள்ள பள்ளிகளுக்கு கிராமமேதான் சுற்றுச் சுவர். கிராமத்திலே இருக்கின்ற எல்லா மக்களும் அந்தப் பள்ளிக்கூடத்திற்குப் பாதுகாவலர்கள். நகரங்களிலேதான் நெருக்கடி ஏற்பட்டு, பள்ளிக்கூட இடத்தை மற்றவர்கள் கைக்கொண்டுவிடுவார்கள்; எடுத்துக்கொண்டுவிடுவார்கள் அல்லது குடியிருக்க வந்துவிடுவார்கள் என்பதற்காகச் சுற்றுச் சுவர் தேவைப்பட்டது. நெருக்கமான இடத்திலேதான் சுற்றுச் சுவர் தேவை. மற்ற பள்ளிகளுக்குச் சுற்றுச் சுவர் தேவையில்லை. அப்படியே தேவை என்றாலும் ஒரு வரம்பு காட்டுவதற்காக மர வேலி வைக்கின்ற முறையிலே, மரங்களைக்கொண்டு, கிளுவை போன்ற மரங்களைக்கொண்டு, ஆடாதொடா போன்ற மரங்களைக்கொண்டு, ஓர் அடையாளத்திற்கு வேலி வைப்பார்கள். பெண்கள் கல்வி கற்கத் தொடங்கியதற்குப் பின்னர்தான், அதிக அளவிற்குச் சுற்றுச் சுவர் இருந்தால் நல்லது என்ற கருத்து அண்மைக் காலத்திலே ஏற்பட்டது. படிப்படியாகத்தான் சுற்றுச் சுவர் கட்டுகின்ற கடமையை அரசு செய்ய முடியும். அதற்குமேல் தேவையானால் பொதுமக்கள்தான் அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளவேண்டும். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: Second supplementary கிடையாது. அடுத்து வினா வரிசை எண் 97. மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. இராமசுவாமி, மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

97—

தடுப்புச் சுவர்

***11134—திரு. கே.பி. இராமசுவாமி:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ராசிபுரம் ஏரிப் பகுதியில் ராசிபுரம் முதல் ஆத்தூர் சாலை வரை தடுப்புச் சுவர் கட்டி அகலப்படுத்தி மேம்பாடு செய்ய அரசு ஆவன செய்யுமா?